பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 தை 3 ரபி - ஆகி 24 இதழ் 332
யாழ்ப்பாணம் புதன்கிழமை 16 1 85

## மன்னாரில் இராணுவம் சுட்டு இருவர் மரணம்!

### கண்ணி வெடிகளால் எவருக்கும் சேதமில்லையாம்

(கொழும்பு)
மன்னாரில் நேற்று ராணுவம் சுட்டதில் இருவர்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மன்னார்- பூநகரி வீதியில் ராணுவத்தினர் பிரயாணம் செய்துகொண்டிருந்த போது மறைந்திருந்த தீவிரவாதிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் அதையடுத்தே ராணுவத்தினர் திருப்பிச்சுட்டதாகவும் கூறப்பட்டது.

அப்பகுதியில் தீவிரவாதிகளால் வைக்கப்பட்டிருந்த 4 கண்ணிவெடிகள் வெடித்தபோதிலும் ராணுவத்தினருக்கு எதுவிதசேதமும் ஏற்படவில்லையாம். வேறு பலகண்ணிவெடிகளையும் ராணுவத்தினர் கண்டுபிடித்தார்களாம்.

இதைத்தொடர்ந்து அப்பகுதியில் தீவிரவாதிகளைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## கைத்தொழில் அமைச்சர்

(கொழும்பு)
புதிய கைத்தொழில் அலுவல்கள் அமைச்சராக திரு. பி. ஸி. இம்புலான நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. இம்புலான நேற்று ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணஞ் செய்து கொண்டார்.

## கீஸிங்கர் பார்த்தசாரதியை சந்திப்பார்

[புதுடில்லி]
முன்னாள் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஹென்றி கீஸிங்கர் வியாழனன்று இந்தியா வருகிறார். இந்தியாவில் இரு தினங்கள் தங்கியிருக்கும் அவர் பிரதமர் ரஜீவ் காந்தி, உப ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன், வெளியுறவு கொள்கை அமைப்புக் குழு தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி ஆகியோரை சந்திப்பார்.

## ஸ்தானிகர் திரும்பினார்

[கொழும்பு]
இந்தியத் தலைவர்களுடன் இலங்கை நிலைமைகள் பற்றி ஆலோசனைநடத்த புதுடில்லி சென்றிருந்த இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு சத்வால் நேற்று கொழும்பு திரும்பினார்.

இலங்கை இனப் பிரச்னையை

# இந்தியா அசட்டை செய்துவிட முடியாது!

## தமது கட்சி எம். பி.க்களுக்கு ரஜீவ்காந்தி விளக்கம்

(புதுடில்லி)
“இலங்கை இனப் பிரச்னை முற்றிலும் அந் நாட்டின் உள்விவகாரம்தான், ஆனால் அங்கிருந்து சுமார் 40 ஆயிரம் மக்கள் இந்தியாவுக்குள் அகதிகளாக வந்திருப்பதால் நாம் அங்குள்ள நிலைமைகளை அசட்டை செய்துவிடமுடியாது.”

இவ்வாறு இந்திய பிரதம மந்திரி திரு. ரஜீவ் காந்தி நேற்று புதிய லோகசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களின் மத்தியில் பேசுகையில் கூறினார்.

(4-ம் பக்கம் 5-ம்கலம் பார்க்க)

## ரயில் யாழ்.வரும்?

(யாழ்ப்பாணம்)
தற்போது பளைவரையும் நடைபெற்றுவரும் ரயில் சேவை நாளை மறுதினம் முதல் யாழ்ப்பாணம்வரை நடைபெறும் என்று கூறப்படுகிறது

நேற்று யாழ்ப்பாணம்வரை பரீட்சார்த்தமாக சரக்கு ரயில் ஒன்று சேவையில் ஈடுபட்டது

மிருசுவிலில், குண்டுவைத்து ரயில் பாதை தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து பளைவரையே ரயில்சேவை நடைபெற்றுவருகிறது. (க)

பாலங்கள் தகர்ப்பு—

## ‘நாம் செய்யவில்லை’ புலிகள் மறுக்கிறார்கள்

[யாழ்ப்பாணம்]
வடமராட்சிக்கான பாலங்கள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டதற்கும் எமக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சுவரொட்டிகள் மூலம் தெரிவித்துள்ளது.

பாலங்கள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது அரசின் திட்டமிட்ட செயலாக இருக்கலாம் என்றும், அச் சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

முல்லைத்தீவில்

## வாகனம் கடத்தப்பட்டதால் அகதிகள் பெரிதும் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]
முல்லைத்தீவில் அகதிகளுக்காக மரக்கறி மற்றும் உணவுப் பொருட்களை சேகரிப்பதற்காக சென்றவாகனம் ஆயுதம் தரித்த 4 இளைஞர்களால் கடத்தப்பட்டதையடுத்து அப்பகுதியில் உள்ள அகதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்வாகனம் கடத்தப்பட்டதையடுத்து அன்றிரவு பல அகதிமுகாம்களுக்கு பாண் விநியோகிக்க முடியாமல் போய்விட்டதாம். சுமார் 8 முகாம்களில் அன்றிரவு அகதிகள் பட்டினி கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

அரசாங்க ஜீப்வண்டிகளை இச்சேவைகளில் பயன்படுத்த முடியாமலிருப்பதால் டிராக்டர்களில் அகதிகளுக்கு பாண் மற்றும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லவேண்டிய

(4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

அச்சுவேலி சம்பவத்தில்

## புலிகளின் ஒரு தளபதியும் 4 பேரும் கொல்லப்பட்டனர்

### ஏனையோர் தப்பிவிட்டதாக அறிவிப்பு

[சென்னை]
கடந்த 9-ம் திகதி இலங்கை ராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்குமிடையில் அச்சுவேலியில் நடைபெற்ற போரில் இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரும், மத்தியகுழு உறுப்பினருமான காப்டன் ரவீந்திரன் கொல்லப்பட்டதாக நேற்று சென்னையில் இவ் இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

24 வயதான ரவீந்திரன் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு மிகவும் வேண்டியவர் என்றும், இவருடன் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மேலும் நான்கு பேர் கொல்லப்பட்டனர் என்றும் இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் ராணுவமுற்றுகையை ஊடறுத்துக்கொண்டு

(4-ம் பக்கம் 5-ம் கலம் பார்க்க)

## பஸ்சேவை பாதிப்பில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ் குடாநாட்டில் ஐந்து பிரதான வீதிகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதனால், வடபிராந்திய போக்குவரத்து சபை பஸ் சேவைகள் பாதிக்கப்படவில்லை.

வழக்கப்போல பஸ் சேவைகள் நடைபெற்று வருவதாக, டிப்போ உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பஸ்சேவை, தொண்டமனாறு ஊடாகநடைபெற்று வருவதாகவும் அவர்தெரிவித்தார்

மற்றும் குண்டினால் தகர்க்கப்பட்ட நான்கு வீதிகளால் சென்றபஸ்கள், வேறு வீதியால் சேவையிலிடுபட்டுள்ளன. (க)

யாழ். மாவட்டத்தில்—

## சகல பாடசாலைகளும் ஒருநேரமே நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
போக்குவரத்து வசதிக்குறைவு காரணமாக யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும், ஒருநேரப் பாடசாலைகளாக நடைபெறும் என்று யாழ் மாவட்டகல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை சகல பாடசாலைகளுக்கும் அறிவித்திருக்கிறார்.

பாடசாலைகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 130 மணிக்கு முடிவடையும் என்றும், மறு அறிவித்தல் வரை இந்நேரப்படியே பாடசாலைகள் நடைபெறும் என்றும் அவர்தெரிவித்துள்ளார்.

பாடசாலை பஸ்சேவை வழக்கம்போல் நேற்று நடைபெற்றது.

## “வெளிநாட்டு உதவியோ, வழிகாட்டலோதேவையில்லை!”

### அமைச்சர் லலித் கூறுகிறார்

[குருநாகல்]
“இனப்பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கு வெளிநாடுகள் இலங்கைக்கு உதவவோ, வழிகாட்டவோ தேவையில்லை அப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் மனோதிடமும் ,வலிமையும் இலங்கை அரசுக்கு உண்டு” என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்

குருநாகலையில் இடம்பெற்ற 99-வது மஹாப்பொல கொண்டாட்டத்தின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து கூறியதாவது: “பயங்கரவாதம் ஒரு உள்நாட்டுப்பிரச்னை. இத

(4-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

# [illegible] விளம்பரம்

## விற்பனைக்கு

மன்னார் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: உ. தி. நந்தகுமார் ஆஸ்பத்திரிச்சந்தி, மன்னார். 1360

மானிப்பாய் மெம்மோறியல் பாடசாலை ஒழுங்கையில் வீடு கட்டக்கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வரத்தினம் செல்வராசா, 1-ம் குறுக்குத் தெரு, இணுவில் றோட், மானிப்பாய். 1338

நல்ல இன கோப்பிக்கன்றுகள் விற்பனைக்குண்டு. அண்ணுபாம், இணுவில் மொஸ்க் லேன் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். 1340

## வகுப்புக்கள்

G. A. Q, B. A., A/L வகுப்புகள் ஆரம்பம் 16-1-85. தொடர்புகளுக்கு: S. அருள். நங்கைJaffna Education Centre சாந்தி சினிமா அருகாமை யாழ்ப்பாணம். 1349

## விற்பனைக்கு

மாவடிச் சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில் வீடு கட்டக் கூடிய நிலத்துண்டு விற்பனைக்குண்டு. திருமதி. ம. இராமநாதன், மே/பா. அமரர் வே. நாகலிங்கம், சட்டத்தரணி, J. P. U. M., வட்டுக்கோட்டை. 1372

எம்மிடம் நல்ல இனக் காளைக்கன்றுகள், சினைப்படுத்தப்பட்ட பசு மாடுகள், எரு, வெற்றுச்சாக்கு முதலியவை விற்பனைக்குண்டு, தொடர்பு கொள்ளவும். பொதுமுகாமையாளர், நல்லூர்த்தொகுதிஅபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். 1361

## தவறிவிட்டது

இல. 272061122 V வல்லிபுரம் சின்னத்துரை அச்செழு என்ற அடையாள அட்டை பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் ஊடாக பஸ்ஸில் வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோ. வேலாயுதம், நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். 1373

கடந்த 9-ம் திகதி யாழப்பாணத்திலிருந்து தெல்லிப்பழை ஊடாக பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது இல. 6206635-14 V கே. ஜெயந்தன் என்ற அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் P.கண்ணப்பா, 'கிருஷ்ணுஸ்', தெல்லிப்பழை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். 1374


வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு

27% தொடக்கம் 30% வரை (வருட முடிவில்)
25% தொடக்கம் 28% வரை (மாதாந்தம்)
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்

குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (ரூபா 1000/-)
எந்நேரமும் அறிவித்தலின் பின் பணத்தை
திருப்பி பெறலாம்.

விபரங்களுக்கு:
Jaffna Property Trades Ltd.,
3, நவீன சந்தை (மேல் மாடி)
யாழ்ப்பாணம் போன்: 23698



1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/5 B கபூர் பில்டிங
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689


## அகதிகள் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு வரும் அகதிகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச்செல்கிறது, கடந்த சிலதினங்களுக்கு முன் நொச்சிகாமம் பகுதியில் இருந்து 11 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர்பாதிக்கப்பட்டு உடமைகளை இழந்த நிலையில் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.


HOME FINANCE LTD
ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்


பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக சீத்தை-பப்ளின், வெள்ளை பப்ளின், பிசாமா போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவுசெய்யவும்

NO. 82, KANNATHIDDY ROAD,
JAFFNA.


## 33-வது நாள் நினைவஞ்சலி

### அமரர் முருகேசு இலட்சுமணன்

(புங்குடுதீவு)



மலர்வு:
28-04-1918

உதிர்வு:
15-12-1984

எங்களை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்திக்காக கண்ணீர் அஞ்சலி செலுத்திப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்
மனைவி, மக்கள், மருமக்கள்.

99/7, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 1346

## மரண அறிவித்தல்

### மாணிக்கவாசகர் சத்தியபாலன்

ஐயனார்கோவிலடி நிலஅளவையாளர் சத்தியபாலன் கனடாவில் அகாலமரணமானார். இவர் ஐயனார்கோவிலடி காலஞ் சென்ற திரு. திருமதி. மாணிக்கவாசகரின் மகனும், விமலாவின் அன்புக் கணவரும், ஆஷா, ராசதேவன், சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும் வில்லவராயர் (நைஜீரியா) சிவகுமாரசூரியர் (தென் ஆபிரிக்கா), தெய்வநாயகி, கோடிஸ்வரன் (கனடா), அம்பிகாபதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இறுதிக் கிரியைகள் 12-1-85 ல் கனடாவில் நடைபெற்றது. தகவல்: இ. சிவசோதி, 5, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 1369

## மரண அறிவித்தல்

### ஊர்காவற்றுறை திருமதி அற்புதலில்லி நட்சேத்திரம்

ஊர்காவற்றுறை கிழக்கைச் சேர்ந்த காலம் சென்ற மூப்பர் திமிங்கு முத்து நட்சேத்திரத்தின் அன்பு மனைவி அற்புதலில்லி காலமானார். இவர் துரைசிங்கம், திருமதி பேபி செல்வராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. எஸ். ஏ. பெர்ணுண்டோ (செல்வராசா) Retd. H. M. Customs மாமியாரும் காலம் சென்ற லிஸ்போவா முத்துவின் சகோதரியும் Capt சிலுவதாஸ், சரோஜினி ஜெயசிங்கம், தவராசா ஆகியோரின் பேத்தியும் சுதர்ஷினி, நிரஞ்ஷினி, சஞ்சீவ், சங்கீதா, ரூஷினி, விகாஷினி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 16-ந் திகதி புதன்கிழமை மாலை நான்கு மணிக்கு 'லூட்ஸ் வில்லா' இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஊர்காவற்றுறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை அன்புடன் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 1371

# யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் கேள்வி அறிவித்தல் — 1985

யாழ்ப்பாணம் அபி. சபை அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடும் சந்தைகள் இறைச்சிக் கடைகள் ஆகியவற்றிற்கு 1985ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதிவரைக்கும் குத்தகைக்கு வழங்குவதற்கும் கடைகளுக்கு தொடர்ச்சியாக வாடகைக்கு வழங்குவதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விகள் 24-01-85ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை யாழ்.அபி. சபை செயலாளரால ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப்பத்திரங்கள் உரிய தொகையைச் செலுத்திய பின்னர் அவ்வவ் உப அலுவலகங்களால் 23-01-85ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விகள் பற்றிய முழு விபரங்களையும், கேள்விப்பத்திர பெறுமதி கேள்விப்பிணை ஆகிய விபரங்களையும் கீழ்க்குறிப்பிடும் உப அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மு. பஞ்சலிங்கம்
செயலாளர்,
யாழ். அபி. சபை

யாழ். அபி. சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
11-01 85.

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|
| 1. சுன்னுகம் | 1. மாட்டிறைச்சிக் கடை | 1,00,000/- |
| | 2. ஆட்டிறைச்சிக கடை. | 17,500/- |
| | 3. சந்தைக்கடை இல: 50 | 25,000/- |
| 2. பண்டத்தரிப்பு பட்டணம் | 1. நவீன சந்தை வெளிப்புறக்கடை இல: 1, 2. | 20,000/- |
| 3. காங்கேசன்துறை | 1. நவீன சந்தைக்கடை 3 | 3,000/- |
| 4. கொக்குவில் | 1 கோண்டாவில் கிழக்கு ஆட்.கடை (விற்பனை நிலையமும், கொல்களமும் சித்திகரக் கேள்விக்காரராலேயே அமைக்கப்படும்) | 10,000/- |
| 5. மயிலிட்டி | 1. பலாலி மாட்டிறைச்சிக் கடை | 15,000/- |
| 6. கிளிநொச்சி | 1. பரந்தன் ஆட்டிறைச்சிக்கடை | 6,000/- |
| | 2. பரந்தன் மாட்டிறைச்சிக் கடை | 35,000/- |
| 7. மானிப்பாய் கிராமம் | 1. தொட்டிலடிச் சந்தை | 2,500/- |
| 8. நயினுதீவு | 1. சந்தைக்கடை 3 | 250/- |
| 9. நெல்லியடி | 1. ராஜகிராமக் கடை 2 | 500/- |
| 10 ஊர்காவற்றுறை | 1. சந்தைக்கடை இல: 4, 5, 6 | 1,500/- |
| (1370) | சந்தைக் கடை இல: 8 | 1,500/- |

# "கிறிஸ்துவின் வழிநின்று நீதிக்காக வாழ்ந்தவர்"

(யாழ்ப்பாணம்)

வங்காலையில் படுகொலைக்கு ஆளான அருட் திரு மேரி பஸ்ரியன் அடிகளாரின் ஆன்ம சாந்திக்காக மானிப்பாய்புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிப் பூசையும், அஞ்சலி வழிபாடும் கடந்த 12-ம் திகதி நடைபெற்றது.

அருட்திரு பி.எம். இம்மானுவேல் அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலிப் பூசையும் நடைபெற்றது.

அடிகளார் தமது தலைமையுரையில் ''கிறிஸ்துவின் வழி நின்று உண்மைக்கும் நீதிக்கும் சான்ருக வாழ்ந்தார் என்று குறிப்பிட்டார்.

வண. அம்பலவாணர் அடிகளார் மற்றும் பலர் கலந்து கொண்ட இப்பூசையில்; ஒரு அன்பரின் நிதி உதவியுடன் பஸ்ரியன் அனுதைப் பிள்ளைகள் நிதியம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

மானிப்பாய் பங்கு வட்டத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களும் பிள்ளைகளும் இதில் கலந்துகொண்டனர். (சூ)

# இலங்கைக் கடற்படையின் மீது கொள்ளைக் குற்றச்சாட்டும் காணப்படுகின்றது!

## வெளியுறவு செயலாளர் ராஷ் கோத்ரா

புதுடில்லி, ஜன. 15

''இராமேஸ்வரத்தில் கைதான இலங்கைக் கடற்படை வீரர்கள் மீது இந்திய மீனவர்களிடம் மீன்வகைகளைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டுகளும் காணப்படுகின்றன. அவர்கள் இந்திய வர்ப்பிரதேசத்நினுள் அத்துமீறி வந்தபோதே கடலோரக் காவல் படையினராற் கைது செய்யப்பட்டனர்'' என்று இந்திய வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் திரு. ராஷ் கோத்ரா தெரிவித்துள்ளார்.

இலங்கை உயர் ஸ்தானிகர் திரு. பேர்ஞட் திலகரத்ன, திரு. ராஷ் கோத்ராவை இலங்கைக் கடற்படையினர் விடயமாகச் சந்தித்தார் அப்போதே மேற்கண்ட விபரத்தை அவர் வெளியிட்டார்.

திரு ராஷ் கோத்ரா மேலும் கூறியதாவது:- இலங்கைக் கடற்படையினர் சம்பந்தப்பட்ட விசாரணைகள் தமிழ் நாடு பொலிசாரால் நடத்தப் பட்டுவருகின்றன.

அவர்கள் மீதான மேல் நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசின் உத்தரவுகள் கிடைத்த பின்னரே ஆராயப்படும்.

அதுவரை கைதான அவர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள். இந்திய மீனவர்களைக் கொலை செய்தது. துன்புறுத்தியது. இந்திய கடல் பிரதேசத்தில் ஊடுருவியது உட்பட' மீன்வகைகளைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டும் இலங்கைக் கடற்படையினர் மீது சுமத்தப்பட்டுள்ளன என்றூர். (கி)

# பாகிஸ்தானில் அடுத்த மாதம் தேசிய சட்டசபை தேர்தல்!

## பொதுக் கூட்டம், பிரசாரம் தடை

இஸ்லாமாபாத் ஜன. 15

பாகிஸ்தானில் தேசிய சட்டசபைத் தேர்தல்கள் அடுத்த மாதம் 24-ம்திகதியும் மாகாண சட்டசபைத் தேர்தல்கள் அடுத்த மாதம் 28-ம் திகதியும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ஜனதிபதி ஸியா வுல் ஹக் நேற்று இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

தேர்தலுடன் அதிபர் ஆலோசனை சபை ஒன்றும் அமைக்கப்படவுள்ளது தேர்தல்கள் கட்சி சார்பற்ற முறையில் நடத்தப்படும்.

பொதுக் கூட்டங்கள், பிரசாரம் செய்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன ஆயினும் வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்யலாம் என்றும் ஜனதிபதி அறிவித்துள்ளார்.

இத்தேர்தல்கள் மூலம் நாட்டில் இஸ்லாமிய ஆட்சி முறையை ஏற்படுத்துவதே தமது முக்கிய நோக்கமாகும்'' என்று ஜனதிபதி ஷியா-வுல்-ஹக் தெரிவித்தார்

தெரிவு செய்யப்படும் தேசிய சட்டசபை மார்ச் 23-ம் திகதி இஸ்லாமாபாத்தில் கூடும்.

இந்த அறிவிப்பு வெளியாவதற்கு முன்னரே பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மீட்பதற்காகப் போராடும் எதிர்க் கட்சித் தலைவர்கள் பலர் இஸ்லாமாபாத், கராச்சி, லாகூர் போன்ற இடங்களில் கைது செய்யப்பட்டனர். இதுவரை 50 எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஜனதிபதியின் இந்த அறிவிப்பு இராணுவ ஆட்சியை நீடிப்பதற்கான ஒரு தந்திர வழியாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர் (சூ)

# ஆசிரியர் இடமாற்ற பட்டியல்

[கொழும்பு]
[தொடர்ச்சி]

1983 ஜூலை கலவரத்தினல் பாதிக்கப்பட்டு பிறமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் விபரம் வருமாறு

திரு. எல் கமலநாதன் இறுஜன் மகாவித்தியாலயம் பொல்காவல, செல்வி எஸ். இராசையா சாகிரா மகாவித்தியாலயம் குருநாகலை, திரு. எஸ். திருச்செல்வம் அன்றூர்மன் குளியாப்பிட்டியா, திரு. எச். இராமநாதன் ஹிச் சுல்ல மகாவித்தியாலயம் குருநாகலை செல்வி ஆர். கனகரத்தினம் மன்தண்டாவெல மகாவித்தியாலயம் மாத்தளை, திரு. கே. மோகனதாஸ் கௌடுபலல்ல தமிழ்வித்தியாலயம் மாத்தளை செல்வி ஹேமலதா. சாகிரா கல்லூரி, அநுராதபுரம், திரு. எம் சிறீஸ்கந்தராசா மக்கியா முஸ்லிம மகாவித்தியாலயம் இரத்தினபுரி, செல்வி கே. தனலட்சுமி சென். ஆன்ஸ் தமிழ் வித்தியாலயம் வத்தளை, திருமதி எம். இராசம்மாள் நீளகம தமிழ் வித்தியாலயம் கஹாவத்த, திருமதி எம். திருநாவுக்கரசு மேர்சென் உயர்தரபாடசாலை இரத்தினபுரி, திரு. ஏ. எஸ். அருமைநாதன் பின்வல்ல தமிழ் வித்தியாலயம் பலாங்கொடை, திரு பி. நாகரத்தினம் டெல்டா தமிழ்வித்தியாலயம் இரத்தினபுரி திரு. எல். இராமசாமி, மாதப்ப தமிழ்வித்தியாலயம றக்வானை, திருமதி எம். சண்முகலிங்கம் தமிழ்வித்தியாலயம். பலாங்கொடை, திருமதி. பி. கிருஷ்ணன், மாதம்ப தமிழ்வித்தியாலயம், நிவித்திகலை, திரு. எஸ் சிங்கராஜா மொறகல்ல தமிழ்வித்தியாலயம் நிவித்திகலை, திரு வி. எம். முத்துராஜா பலாங்கொடை மகாவித்தியாலயம் பலாங்கொடை, திரு. ஆர். துரைநாயகம் ஆர். கே எம். இந்துக்கல்தூரி திருகோணமலை, செல்வி எம். துரைராஜா சண்முகாவித்தியாலயம் திருகோணமலை, இராசமலர் டேவிட், கோபாலபுரம் தமிழ்வித்தியாலயம், நிலாவெளி, திருகோணமலை, திருமதி சாவித்திரி குணரத்தினம் சென். ஜோசப் கல்லூரி திருகோணமலை, திரு. ஆர் இராஜமணி ஆர் கே. எம். இந்துக் கல்லூரி திருகோணமலை, திரு எஸ் வைகுந்தசாமி ஆர் கே எம்.இந்துக்கல்லூரிதிருகோணமலை, திரு எஸ். குணவீரசிங்கி கிளிவெட்டி மகாவித்தியாலயம் கிளிவெட்டி, திருமதி எல். புஷ்பநாதன் ஆர். கே. எம் இந்துக் கல்லூரி திருகோணமலை, திருமதி வி. பி தேவராஸ், தேவி துரை தமிழ் வித்தியாலயம் எத்லான்துற, திருமதி எஸ்.செல்லையா இந்து தமிழ்வித்தியாலயம் கம்பஹா, திரு எஸ். ஆர் மகேந்திரன், மன்னம்பிட்டிய தமிழ் வித்தியாலயம் பொலன்னறுவை, திரு சி. செல்வவிநாயகம் பனவத்த ஜி ரி வி. எட்டியாந்தோட்ட, செல்வி பி கனகரத்தினம், சாஹிரா முஸ்லிம் மகாவித்தியாலயம் மாவனல்ல, திருமதி எம் செல்லத்துரை வகரக்க, திரு. கே. ஜெயானந்தன் மணிக்கந்த தமிழ் வித்தியாலயம் தெரணியகல, திருமதி கே காராளசிங்கம் தெஹியோவிட்டதமிழ் வித்தியாலயம் எட்டியாந்தோட்ட, திருமதி கே. கே. கயிலைநாதன் சப்புமல்கந்தை, தெஹியோவிட்ட, திரு. எம். பாலேந்திரன் வீலுயா தமிழ் வித்தியாலம் கேகாலே. திருமதி. ஐ. புவனேஸ்வரி சென் அந்தனீஸ் பாடசாலை கொழும்பு, திருமதி. எம் சி. இக்னேஷியன் சென் கிளாஸ் பெண்கள் மகா வித்தியாலயம் கொழும்பு, திருமதி. எல் சுப்பிரமணியம் இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டியா, திருமதி ஏ. சண்முகலிங்கம் இரத்மலானை திருமதி. ஏ ரி. அநளாளந்தன் ஹக்கீன் வித்தியாலயம் கொழும்பு, திருமதி பி. கனேசன் தெமட்டகொட தமிழ் மகா வித்தியாலயம்கொழும்பு, திருமதி எம். ரத்தினவேல் புளுமெண்டால் இ. வென்றி. எம். எஸ். கொழும்பு, திருமதி அம்பினக விஜயானந்தன் விவேகானந்தா மகா வித்தியாலயம் கொழும்பு, திருமதி. எம்.கனகரத்தினம் விவேகானந்தா மகா வித்தியாலயம் கொழும்பு, திருமதி ஆர். சௌந்தரநாயகன் உப்புக்குளம் தமிழ் மகாவித்தியாலயம் கொழும்பு, செல்வி கே. அப்புக்குட்டி பாத்திமா முஸ்லிம் ஜி ரி எஸ். கொழும்பு, திருமதி எம் அரியரத்னராஜா ஆர் சி. ரி எம் எஸ். பம்பலப்பிட்டியா, திருமதி. எஸ். நல்லைநாதன் விவேகானந்தா மகாவித்தியாலயம கொழும்பு, திருமதி எஸ். கனகராஜா விவேகானந்தா மகாவித்தியாலயம் கொழும்பு, திருமதி எல். சுந்தரலிங்கம் இரத்மலானை இந்துக்கல்லூரி இரத்மலானை, திருமதி ஏ. சண்முகலிங்கம் இரத்மலானை இந்துக் கல்லூரி இரத்மலானை, திருமதி ரி, நித்தியானந்தன் விவேகானந்தா மகாவித்தியாலயம் கொழும்பு. திருமதி ராஜேஸ்வரி கனகசுந்தரம்பிள்ளை விவேகானந்தா மகாவித்தியாலயம் கொழும்பு, திருமதி ஜி பி வேதநாயகம் முஸ்லிம் வித்தியாலயம், கொட்டாஞ்சேனை, கொழும்பு, திரு. எஸ் ராஜகோபாலபிள்ளை கொள்ளுப்பிட்டி மெதடிஸ் வித்தியாலயம் கொழும்பு, திருமதி. பி. சிவஞானதாசன் இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி திருமதி கே. சேஞதிராஜா சென். ஆன்ஸ் தமிழ் ஜி ஆர். சி. கொழும்பு,திருமதி ராகினி சிறீஸ்கந்தராசா விவேகானந்தா மகாவித்தியாலயம் கொழும்பு, திருமதி எஸ். சொக்கலிங்கம் இரத்மலானை இந்துக்கல்லூரி, இரத்மலானை, திருமதி. பி. சின்னத்தம்பி,வுல்வென்டால் மகாவித்தியாலயம் கொழும்பு, திருமதி ரோஜிணி தியாகலிங்கம் அல்-இக்யால் மகாவித்தியாலயம் கொழும்பு, திருமதி. என். கந்தசாமி விவேகானந்தா மகாவித்தியாலயம் கொழும்பு, திருமதி எஸ் சுந்தரலிங்கம் இந்துக் கல்லூரி பம்பலப்பிட்டி, திருமதி எல். பத்மநாதன் கணபதி வித்தியாலயம் கொழும்பு, திருமதி எஸ். பாலச்சந்திரன் சென். ஆன்ஸ் தமிழ் வித்தியாலயம் கொழும்பு, திரு பி. தர்மராஜா செபஸ்தியான் தமிழ் வித்தியாலயம் கொழும்பு, திருமதி ஜி. எஸ். அருமைநாயகம் ஒபயசேகரபுர, ராஜகிரியா, திரு சி. அற்புதசிங்கம் தெஹிவளை முஸ்லிம் பாடசாலை, தெஹிவளை, திரு. எஸ். செல்வராஜா தெமட்டகொட மகாவித்தியாலயம் தெமட்டகொட, திருமதி பி. பி. ஞானசுந்தரம் மாதம்பிட்டி சென். அந்தனீஸ் தமிழ் வித்தியாலயம், திருமதி எஸ். இரத்தினம் நுகேகொடை, திருமதி ஏ. கிருபைராஜா மகாவத்த ஜி ரி எம் எஸ் கொழும்பு, திருமதி கே. சண்முகராஜா பாலவத்த ஆர் சி ரி சிலாபம், திரு. கே பத்மநாதன் ரல்கஸ்வெல தமிழ் வித்தியாலயம் ரல்கஸ்வெல, திருமதி எஸ் பத்மநாதன் தேவுதுரை தமிழ் வித்தியாலயம் எல்பிட்டி, திரு. எம். செல்லையா வெலிப்பன முஸ்லிம் வித்தியாலயம், திரு. வி. நடராஜா ஹறகம தமிழ் வித்தியாலயம். திருமதி பி. பாலசுப்பிரமணியம் கண்டி மகாவித்தியாலயம் திரு. கே. எஸ். அச்சலிங்கம் ஹறகம தமிழ் வித்தியாலயம். இங்கிரியா, திருமதிஎஸ்.கணேசமூர்த்தி அல். பஹிரியா மத்தியமகாவித்தியாலயம்,செல்வி எஸ். எம். ரி. இந்திராணி குட்செப்பேர்ட், செல்வி எஸ். கௌரி துறகம கிழக்கு தமிழ் வித்தியாலயம், அக்கரபத்தன, திருமதி சி சரஸ்வதி, அக்ரா தமிழ் வித்தியாலயம், அக்கரபத்தன, திருமதி பி. பார்வன் சரஸ்வதி மகா வித்தியாலயம் லிண்டுல, திருமதி கோகிகதார் றகல்ல மகா வித்தியாலயம் திரு. எஸ். மோகன்தாஸ் தமிழ் வித்தியாலயம், மாத்தளை, திரு. ஏ. இராஜரத்தினம் தமிழ் வித்தியாலயம், பண்டாரவளை, செல்வி எல். கதிரவேலு உடிஸ்பத்துவ முஸ்லிம வித்தியாலயம், திருமதி சி சிறீகாந்தா வெலிமடை தமிழ் மகா வித்தியாலயம், செல்வி என். வன்னியசிங்கம் கொஸ்லாந்த தமிழ் மகா வித்தியாலயம். (முற்றும்)

# வண. பிதா பஸ்தியனுக்கு நாரந்தனையில் இன்று அஞ்சலி!

(யாழ்ப்பாணம்)

வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட அருட். திரு. மேரி பஸ்தியன் அடிகளாருக்கு அஞ்சலியாகவும் அவரது ஆன்மசந்திக்காவும் ஊர்காவற்றுறை, நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் தேவாலயத்தில் இன்று புதன்கிழமை மாலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

நாரந்தனை பங்குத்தந்தை அருட்திரு றெஜீஸ் ராஜநாயகம் அடிகளார் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார். ஊர்காவற்றுறைப்பகுதியிலிருந்து பெருந்திரளானவர்சள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இருபாலையில் கைதான இளைஞர்கள்

[யாழ்ப்பாணம்]

கடந்த 6ம், 7ம், திகதிகளில் இருபாலையில் ஆயுதப்படையினர் மேற்கொண்ட சோதனையின்போது பின்வருவோர் கைது செய்யப்பட்டனர்.

மா. கமலவாசன், மு. முரளிதரன், தி. பகீரதன், சோ. பரமானந்தம், மூ. பத்மநாதன், இ. உதயகுமார் க. பரமநாதன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் முரளிதரன், பகீரதன், கமலவாசன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர். ஏனைய நால்வரும் தொடர்ந்தும் குருநகர் இராணுவ முகாமில் வைக்கப்பட்டுளளனர். (சூ)

# கடிதங்கள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ். பிரஜைகள்குழு மூலம் காலி பூஸா முகாமிலுள்ள தமிழ் இளைஞர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதங்களை பண்டத்தரிப்பு, சில்லாலை பகுதிகளிலுள்ள பெற்றோர்களுக்கு டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி விநியோகித்தார்.

சித்தங்கேணி, பண்ணுகம், போன்ற இடங்களிலுள்ள பெற்றோர்களுக்குரிய கடிதங்கள் திரு நாக பத்மநாதன் மூலம் விநியோகிக்கப்பட்டன.

# யாருடையது

வட்டக்கச்சி சிவசுந்தரம் வீதியைச் சேர்ந்த கோபாலு துரைசிங்கம் மயிலிட்டி தெற்கைச்சேர்ந்த திருமதிஅழகம்மா தமாரசாமி, அனுராதபுரம் புதியநகரப் பிரதான வீதியைச்சேர்ந்த பாலையா இராசையா, உருத்திரபும் மிக்கெல் சவரிமுத்து, யாழ், ராஜசிங்க வீதி பிரான்சிஸ் தாவிது ஆகியோரின் அடையாள அட்டைகள் ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.


றீகல் மினி
தினசரி 10-15, 1-15 மட்டும்.
சிவாஜி, பிரபு, அம்பிகா, ராதா நடிக்கும்
வெள்ளை ரோஜா

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15,
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)

## மணிவாக்கு

செல்வம் சேர்ப்பதில் மட்டும் நாம் இறக்கும் மனிதர்கள் அல்ல. புகழைச் சம்பாதிப்பதிலும் கூட நாம் மரிக்கிறோம். ஆனால் நாம் உண்மையை நாடுவதில் அழியாத தன்மை அடைகிறோம், ஆகவே அழிவுக்கும், மாறுதலுக்கும் நாம் அஞ்சவேண்டிய அவசியமேஇல்லை.

—தோரோ

# நமதுநோக்கு

## மறைந்த இலைமறைகாய்

எல்லார்க்கும் நன்றாம்
பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம்
தகைத்து

சடுதியில் எம்மைவிட்டுப் பிரிந்த உலகப் புகழ்பெற்ற சட்டத்தரணி அம்பலவாணர், இக்குறளில் தமிழ் முனிவர் குறிப்பிட்டிருக்கும் பணிவுக்கு ஒரு சிறந்த உதாரணமானவர்.

கல்வி, நல்லகுணம், நல்ல குலம், தனம் எல்லாமே செல்வம்; ஆனால் செல்வத்துக்குச்செல்வமாகும் பணிவு இன்றேல் இப்பெருமைகளெல்லாம் சிறுமைகளாகி விடுவதை நம் அனுபவத்தில் காண்கின்றோம்; இலகுவில் உணர்வதில்லை.

பணிவில்லாத விடத்து கல்வி, செல்வம், குலம் எல்லாம் செருக்கை உண்டாக்கி விடுவதால் எவ்வளவு புகழ் பெற்றிருந்தபோதும் மக்கள் அவர்களைப் போற்றுவதில்லை

சதுரங்க விளையாட்டை இலங்கையில் மன்ற ரீதியாக அமைத்தவர்களில் ஒருவரான அமரர் அம்பலவாணர் அந்த விளையாட்டு ஒன்றையே பொழுதுபோக்காகக் கொண்டவர். அதனை விளையாடிக் கொண்டிருந்தபோது அவருடைய ஆவி 61ம் வயதில் பிரிந்தது அவர் மறைவு இலங்கைக்கு மட்டுமல்ல பொருளாதாரத்தை வர்த்தகம்,வரி, வங்கி, முதலீடு போன்ற துறைகள் மூலம் எவ்வாறு உயர்த்தலாமென்று கவலை கொள்ளும் நாடுகள் அனைத்துக்கும் நிரப்ப முடியாத பேரிழப்பாகும்.

எங்கள் நாட்டைப்பொறுத்தளவில் யாழ்ப்பாணத்தின் ஒரு பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவர், கொழும்பில் கல்விகற்று பட்டங்கள் பல பெற்றும் இந்த நாட்டிலேயே வாழ்ந்தவர் எல்லா இனத்தவரின் நன்மதிப்பைப் பெற்று, இங்கிருந்தே பிரிட்டன் பாரிஸ், ஆசிய பாசிபிக் பிராந்தியங்களில் உள்ள பல நாடுகளுக்கும் அடிக்கடி பயணஞ் செய்து உலகளாவிய வரி மதிப்பீடு வர்த்தக முதலீடு போன்ற பெருவிடயங்களில் தலைமைத்துவ பணிகளை திறம்பட மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கும், இலங்கைக்கும் பெரும் புகழ் ஈட்டிய பெருமகனார் ஒரு தனியான தனித்துவமான நிறுவனமாக விளங்கினார். இத்தனையும் இரண்டாவது ஆள் அறிய முடியாத அமைதியான சேவை; ஈட்டிய பெருஞ் செல்வத்தை யாருமறியாத வகையில் பிறருக்கு வாரி வழங்கினார்.

அமெரிக்க ஜனாதிபதி ரீகனின் இன்றைய பிரச்னை தமது பட்ஜெட்டை எவ்வாறு வெட்டலாமென்பது. வரியை உயர்த்துதல் ஜனாதிபதுக்கு கசப்பான கொள்கையாயிருந்த போதும் இன்று பாதுகாப்புத் துறையில் கைவைக்க முடியாதென்று அத்துறைத்தலைவர் வென்பேகர் அடித்துக் கூறியதும் வரிமதிப்பாள நிபுணர்களிடம் தஞ்சம் புகுந்திருக்கிறார். மறைந்த எங்கள் நிபுணர் அம்பலவாணர் இன்று அங்கிருந்தால், அவருடைய ஆலோசனை உலக சமாதானத்துக்கே உதவியிருக்கும்.

இலங்கைப் பெருமகன், தமிழன், யாழ்ப்பாணத்தான், தம்முடைய மக்களை, நாட்டைப் பேண வேண்டுமென்பதால் சட்டத்தில் சத்தியத்தைக் காணும் பணியில் உலகெங்கும் வட்டமிட்ட போதும் ஆங்கிலப்புலவன் உவேட்ஸ்வேர்த் வர்ணிக்கும் வானம் பாடிபோல் வீட்டுக்கு வரத்தவறவில்லை.

இச்சிறுநாட்டில் பிறந்து, இங்கே வளர்ந்து எல்லாச் சமூகங்களுடனும் நன்றாகப் பழகி, அமைதியான இலைமறைகாய் போன்ற சேவையில் நன்றாகப் பழுத்த பண்பாளனின் வாழ்வு இன்று வாழத்தெரியாது துன்புறும் மக்களுக்கும், வழிதெரியாது தடுமாறும் அரசுக்கும் ஒரு முன்மாதிரியாகவும், எச்சரிக்கையாகவும் அமைகின்றது.

சட்டத்தில் புலி; புலியூரில் நடமாடும் அம்பலவாணனின் நாமத்துக்கு எல்லாவகையிலும் தகுதியுடையவர்.

இன்று குருபூசை

## தாயுமானவர் பொன்மொழிகள்

1. மார்க்கண்டர்க்காக மறலி பட்டபாட்டையுன்னிப்
பார்க்கின் அன்பர்க்கென்ன பயங்காண் பராபரமே

2. என்செயினும் என்பெறினும் என்னிறைவா
ஏழையான் யான்
நின்செயலென் றுன்னும் நினைவுவரக் காண்பேனே?

3. மனமான வானரக் கைம்மாலை யாக்காமல்
எனையாள் அடிகளடி எய்துநாள் எந்நாளோ?

4. எண்ணிறைந்த மேன்மை படைத்தெவ் வுயிர்க்கு
மவ்வுயிராய்க்
கண்ணிறைந்த சோதியை நாங்காண வாநல்லறிவே

5. ஆருமறியாமல் எனை அந்தரங்கமாக வந்து
சேரும்படி இறைக்குச் செப்பிவா பைங்கிளியே

6. ஆமை வருமாட் கண்டைந்தடக்கஞ் செய்தாற்போல்
ஊமையுருக் கொண்டொடுங்குவது மெக்காலம்

## "மாணவர்களே! நீங்கள் படிக்கவேண்டியவர்கள்"

[யாழ்ப்பாணம்]

மாணவர்களே! நீங்கள் படிக்க வேண்டியவர்கள் படியுங்கள் என்று தமிழ் ஈழ மாணவர் ஒன்றியத்தினர் சுவரொட்டிகள் மூலம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று பெரிய அளவிலான இச் சுவரொட்டிகள் காணப்பட்டன. சுவரொட்டியில் 'ரெலோ' என்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

தமிழ்ஈழ மாணவர்களே நீங்கள் படிக்கவேண்டியவர்கள், படியுங்கள். பல்கலைக் கழக அனுமதிக்காகவும், பகட்டான உத்தியோகத்திற்காகவும் மட்டுல்ல சமுதாய சீர்கேடுகளை சீர்தூக்கிப்பார்த்து, அவற்றை சீரமைக்கும் சீரிய நோக்குடனும் கூட, என்று அச்சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்தது. [க]

## சைக்கிள் பாவனையாளருக்கு தற்காலிக பர்மிட்

[யாழ்ப்பாணம்]

சைக்கிள் பர்மிட்டுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு கிராம சேவகர் காரியாலயங்களில் தற்காலிக 'பர்மிட்' வழங்கப் பட்டுவருகிறது.

"இந்த தற்காலிக 'பர்மிட்' பத்துநாட்களுக்கு மட்டும் பாவிக்கலாம்.

பத்து நாட்களின் பின்னர் கிராம சேவகர் காரியாலயத்தில் இதை ஒப்படைத்து 'பர்மிட்' பெற்றுக்கொள்ளலாம்

தற்காலிக 'பர்மிட்'டில் சைக்கிள் செலுத்த கூடிய பிரதான பாதைகள் பற்றிய விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது [க]

## தொண்டமானாறில் ராணுவம் சோதனை

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறுவெளிக்கள நிலையத்தில், இராணுவத்தினர் முகாமிட்டு, அவ்வீதியால் செல்லும் வாகனங்களை பலத்த சோதனையிலீடுபட்டுள்ளனர்.

அடையாள அட்டைகள் காட்டுமாறு பிரயாணிகளிடம் கேட்கப்பட்டது. அடையாள அட்டை இல்லாதவர்கள், விசாரணைக் குட்படுத்தப்பட்டனர்.

நாவற்குழியிலும் நேற்று இராணுவத்தினர் முகாமிட்டு, வாகனங்களை சோதனையிட்டு வருகின்றனர். (க)

## சூடப்பட்டு மரணமானவருக்கு சமூகநலன் விரும்பிகள் இறுதிக்கிரியை நடத்தினர்

[யாழ்ப்பாணம்]

யாழ் பஸ் நிலையத்தில் இரவு நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானவரின் சடலம் சில சமூக நலன் விரும்பிகளால் பொறுப்பேற்கப்பட்டு நேற்று வில்லூன்றி மயானத்திற்கு வான் ஒன்றில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு இறுதிக் கிரியைகள் செய்யப்பட்டன.

சோமு என்று அழைக்கப்படும் சித்த சுவாதீனமற்றவரே, பலியானவராகும்.

இவரது சடலம், யாழ். ஆஸ்பத்திரியில்ஒப்படைக்கப்பட்டு, நேற்று மரண விசாரணை நடைபெற்றது. (க)

## பிரபல தமிழ் சட்டத்தரணிகளின் உருவப் படங்களுக்கு நூலகத்தில் அவமதிப்பு

(கொழும்பு)

கொழும்பு சட்ட நூலகத்தில் சுவரில் மாட்டிவைக்கப் பட்டிருந்த புகழ்பூத்த இரு தமிழ் சட்ட வல்லுனர்களின் உருவப்படங்கள் அவமதிக்கப் பட்டுள்ளதுபற்றி பொலிசார் புலன் விசாரணை நடத்திவருகின்றனர்.

இருவருடங்களுக்குமுன் காலமான சி. தியாகலிங்கம் கியூ.ஸியின் உருவப்படம் கழுத்தில் வெட்டப்பட்டும், நூலகத்தின் செயலாளராக விருந்தவரும் கடந்த வருட இனக்கலவரத்தில் கொல்லப்பட்டவரான ஏ. கணேசனின் படம் கழிவுகூடத்தில் திணிக்கப்பட்டும் கிடந்ததாம்.

இவர்களின் சட்டத்துறை சேவைக்கு மரியாதையாக நூலகத்தில் இவர்களின் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

## முல்லைத்தீவில்...

(1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

நிலை ஏற்பட்டுள்ளது. மாலை நேரங்களில் ஊரடங்கு வேளையிலும் அகதிகளுக்கு சேவை புரியும் வகையில் கடத்தப் பட்ட வாகனத்துக்கு அரசாங்க அதிபர் விசேஷ அனுமதி ஏற்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பயிர்கள் நாசம்

இதேசமயம் அலம்பின்,செம்மலை குமுழமுனை ஆகிய பகுதிகளில் மக்கள் வெளியேறியிருப்பதால் விவசாயம், யானைகள், மாடுகள் போன்ற மிருகங்களால் நாசமாக்கப்பட்டுள்ளது குறிப்பாக தெங்குப் பொருள் கூட்டுத்தாபனத்தினால் பயிர்செய்யப்பட்டிருந்த தென்னம்நாற்றுகள் அழிக்கப் பட்டுவிட்டதாகக் கூறப்படுகின்றது.

## மட்டக்களப்பு ப. நோ. கூ. சங்கத்தில் ரூபா 47,000 கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ப. நோ. கூ. சங்கத்தில் நேற்றுக்காலை 10-30 மணியளவில் இனந் தெரியாத இளைஞர்களினால் துப்பாக்கிமுனையில் 47,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு...

[1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி]

னைத் தீர்த்துவைக்கும் பொறுப்பு இலங்கையுடையது.

இந்த நாட்டில் ஒரு அங்குல நிலந்தானும் கைப்பற்ற அனுமதிக்கப்பட மாட்டாது. பிரபாகரன் தலைமையிலான பயங்கரவாதக்குழு 5 ஆயிரம் சிங்களவர்களைக் கொலைசெய்யத் திட்டமிட்டிருந்தது

பயங்கரவாதிகள் வடபகுதி பாலங்களைத் தகர்த்துள்ளார்கள். இதனால் அவர்கள் தமது மக்களுக்கே பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அச்சுவேலியில் பயங்கரவாதிகளின் முகாம் கண்டுபிடிக்கப்பட்டு பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அம் முகாமைப்பற்றி தகவல் தந்தோருக்கு சன்மானம் வழங்கப்படும் என்றார். (கி)

## அச்சுவேலி...

(1ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

கப்பிவிட்டனர் என்றும் அவ் அறிக்கை கூறியது.

புலிகளின் தலைமையகத்தை அழித்துவிட்டதாக அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறியிருப்பதில் உண்மையில்லையென்றும், இலங்கையில் பல இடங்களில் அமைந்துள்ள இயக்கத்தின் தளங்களில் ஒன்றுதான் அச்சுவேலியில் இருந்தது என்றும் அறிக்கை கூறியது.

## இலங்கை...

(1-ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி

இந்திய பாராளுமன்றத்தின் மத்திய மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கையின் இனப்பிரச்னைக்கு இலங்கைஅரசு விரைவாக ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்தும் என்றநம்பிக்கையையும் திரு. ரஜீவ்காந்தி வெளியிட்டார்.

நேற்று இந்தியாவின் எட்டாவது லோகசபைக் கூட்டம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமானது. தற்காலிக சபாநாயகர் திரு ஜகஜீவன்ராம் முன்னிலையில் திரு காந்தி லோகசபையில் பிரதமமந்திரியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இவரைத்தொடர்ந்து ஏனைய இந்திராகாங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இதரகட்சிலோகசபா உறுப்பினர்களும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தமதுகட்சி உறுப்பினர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய திரு. ரஜீவ்காந்தி இலங்கை இனப்பிரச்னை முற்றிலும் ஒரு உள்நாட்டுப் பிரச்னையாகும். இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட நாம் விரும்பவில்லை. ஆனால் அங்கிருந்து சுமார் 40 ஆயிரம்மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக வந்துள்ளனர். எனவே நாம் அந்நாட்டிலுள்ள நிலைமையை அசட்டை செய்துவிட முடியாது" என்றார்.

'இலங்கை இனப்பிரச்னைக்கு அந்நாட்டின் அரசாங்கம் விரைவில் அரசியல் தீர்வொன்றைக்காணும். அத்துடன் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளும் நாடுதிரும்பும் நல்ல சூழ்நிலை உருவாகும்" என்றார்.

இந்தியா சகல நாடுகளுடனும் நட்புறவையே வைத்துக்கொள்ள விரும்புகிறது. ஆனால் நமது நட்பு நாடுகளை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் என அவர் கூறினார். (கி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.